5. அறிக்கைகள் அளித்தல்

பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். முத்தையா, பொது நிறுவனங்கள் குழுத் தலைவர் அவர்கள்.*

திரு. எஸ். முத்தையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வாசிக்கப் போவது ஒரு வரிதான். நடைபயிற்சியைப் பற்றி இரண்டு வரிகள் மட்டும் சொல்ல விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். முத்தையா, நேரமில்லை, சீக்கிரம் முடியுங்கள்.*

திரு. எஸ். முத்தையா: "Early morning, empty stomach, brisk walk, 30 to 45 minutes a day, for five days at least a week." *அவ்வளவுதான்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *டாக்டரின் அறிவுரை போதும். நீங்கள் குழுக்களின் அறிக்கையைப் பேரவைக்கு அளியுங்கள்.*

முற்பகல் 11–45

திரு. எஸ். முத்தையா: *மாண்புமிகு அம்மா அவர்களின் நினைவிடத்திற்கு இன்றைக்குச் சென்றிருந்தபோது, இரண்டு சட்டமன்ற உறுப்பினர்கள் அங்கே அமர்ந்திருந்தார்கள். அவர்களிடம், "நடைபயிற்சி செல்லவில்லையா?" என்று கேட்டேன். அதற்கு, "நாங்கள் அதிகாலை 4 மணிக்கே நடைபயிற்சியை முடித்துவிட்டோம்" என்று தெரிவித்தார்கள். கூடியமட்டும், காலை இளவெயில், இளஞ்சூரியன் இலையில்பட்டு ஆக்ஸிஜன் வரவேண்டும்; அந்த நேரத்தில் நடக்க வேண்டும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு மீண்டும் என்னுடைய பணிவான நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2016–2018 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் பதினொன்றாவது முதல் முப்பத்து நான்காவது வரையிலான 24 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்குப் பணிவுடன் அளிக்கிறேன்.